2010 ஜனவரி 11] [பேரவைத் தலைவர்]

அண்ணா பல்கலைக்கழகம், சென்னை:

திரு. டி. சுதர்சனம்

திருவள்ளுவர் பல்கலைக்கழகம் :

திரு. ஆர். காந்தி

திரு. சி. ஞானசேகரன்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்:

திரு. எம்.என். கந்தசாமி

தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவர்களுடைய உறுப்பினர் பதவி முடிவடையும்.

12. புதிய வளாகத்தில் சட்டமன்றம் செயல்படவிருப்பதையொட்டி முதலமைச்சருக்குப் பேரவைத் தலைவரின் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எண்ணற்ற பெருமைகளையும் பண்பாட்டு மரபுகளையும் நெடிய வரலாற்றுப் பின்னணிகளையும் கொண்ட இச்சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பேரவைக் கூட்டம் நடைபெறும் கடைசி நாள். தமிழக வரலாற்றில் பொன்னேட்டில் புதிய அத்தியாயம் தொடங்கும் நிகழ்ச்சி. தமிழ்நாட்டிற்குப் பொன்னாரமாய் புதுச் சட்டமன்ற வளாகம் கட்டப்பட்டு அக்கட்டடத்தில் அடுத்த பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

சரித்திரப் புகழ் வாய்ந்த, சிறப்பு வாய்ந்த இச்சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நாட்டு மக்களின் நலன் ஒன்றையே

பெரிதாகக் கருதி அயராது அரும்பணியாற்றி நல்ல பல சிறப்புகளை விட்டுச் சென்ற முன்னோர்கள் வழிநின்று மக்களாட்சி முறையில் மாண்புகளைக் காத்து, நல்லாட்சி புரிந்து வரும் என் தலைவர் கலைஞர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சாமானியனான என்னை இச்சட்டமன்றத்தில் பேரவைத் தலைவராக பணியாற்ற வாய்ப்பளித்து, எனக்குப் பெருமை அளித்தது எனக்கு ஒரு பெரும் பேறு என்றே கருதுகிறேன். அதற்காக என்னுடைய கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். இம்மாமன்றத்தில் பல அத்தியாயங்கள், புரட்சிகரமான அத்தியாயங்கள் நாட்டின் முன்னேற்றப் பாதையில் செலுத்துகின்ற அத்தியாயங்கள் பல நடந்திருக்கின்றன. அதற்கெல்லாம் மேலாக நமது தலைவர், பொன்விழா நாயகர், அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அடித்தள மக்களின் சுயதேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். இன்னும் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பிலே பவள விழா காண வேண்டும், அவர் புகழ் வாழ வேண்டுமென்று உங்கள் அனைவரின் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(உ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.